**செய்தி வெளியீடு எண் : 289** **நாள் : 12.02.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை, இந்தியா மற்றும் நேபாளம் அணிகளுக்கு இடையிலான சர்வதேச கால்பந்து போட்டியில் இந்திய அணியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டை சார்ந்த வீராங்கனைகள் மற்றும் உலக ரேப்பிட் செஸ் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனை ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

சர்வதேச அளவிலான பெண்கள் கால்பந்து போட்டி, சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 2023 – பிப்ரவரி 15 மற்றும் 18 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போட்டி நடைபெறுகிறது. நட்புரீதியாக நடைபெறும் இந்தப் போட்டியில் இந்தியா மற்றும் நேபாளம் அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டியில் இந்திய அணியில் விளையாட தமிழ்நாடு கடலூர் மாவட்டத்தை சார்ந்த சந்தியா, இந்துமதி மற்றும் சேலம் மாவட்டத்தை சார்ந்த சௌமியா, கார்த்திகா ஆகிய 4 வீராங்கனைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீராங்கனைகள் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை, 11.02.2023 அன்று சென்னை ஆழ்வார்பேட்டை முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது தமிழ்நாடு சார்பில் விளையாடும் வீராங்கனைகளிடம், நடைபெறும் சர்வதேச போட்டியில் சிறப்பாக விளையாடி வெற்றிக் கோப்பையை பெற வேண்டுமென வாழ்த்தினார்.

மேலும், கஜகஸ்தான் நாட்டில் அண்மையில் நடைபெற்ற உலக ரேப்பிட் செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் 8 புள்ளிகள் பெற்று வெண்கலம் பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த 15 வயது சிறுமி சவிதா ஸ்ரீ அவர்கள் சந்தித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.

இந்திய அளவில் உலக ரேபிட் செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் பதக்கம் வென்ற மூன்றாவது வீராங்கனை சவிதா ஸ்ரீ ஆவார். உலக ரேபிட் செஸ் சாம்பியன்ஷிப் தொடர் வரலாற்றில் குறைந்த வயதில் பதக்கம் வென்ற வீரர் என்ற சாதனையையும் இதன் மூலம் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் தமிழ்நாடு கால்பந்து விளையாட்டு சங்க துணைத் தலைவர் திரு. சுரேஷ் மனோகரன், இந்திய பெண்கள் கால்பந்து அணியின் உதவி பயிற்சியாளர் கல்பனா தாஸ், காஞ்சிபுரம் மாவட்ட கால்பந்து விளையாட்டு சங்க தலைவர் ராபர்ட் மற்றும் சிறுமி சவிதா ஸ்ரீ அவர்களின் பெற்றோர் பாஸ்கர் மற்றும் சரலா ஆகியோர் உடன் இருந்தனர்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in